DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 452/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**A1 to A4 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆசைதம்பி |
| Father / Husband Name | சன்னாசி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **23.06.2026**

**முதல் விசாரணை:**

1.)நான் தற்போது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2025 ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பார்த்திபன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும். தற்போது அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 10.02.2025 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்திபன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மேல்மருவத்தூர் மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த அன்பரசு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலத்தை பெற்று வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 54/2025 BNS பிரிவுகள் **296 (b)** 115(2) 118 (1) 351(3) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜகன் மற்றும் வீரமகேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 3 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் 10.02.2025 ம் தேதி மதியம் 12.45 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கங்கா சரவணன் நகர் அருகே சுமார் 3 அடி நீளமுள்ள கட்டையை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளார்.**(அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 10.03.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி யோகநாதன் என்பவரை பிரிபு 35(3) (4) BNSS ன் கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். பின்னர் மற்ற எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 உடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(அந்த படிவம் 91 அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த 3 அடி நீளமுள்ள கட்டை சபொஆ 1ஆக குறியீடு

செய்யப்படுகிறது).

3. பின்னர் வழக்கில் காயம் பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் உலகநாதன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கில் காயம்பட்ட நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான **296 (b)** 115(2) 118 (1) 351(3)ல் இருந்து **296 (b)** 115(2) 118 (2) 351(3) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல அறிக்கை அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது **296 (b)** 115(2) 118 (2) 351(3) ன் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை .**

4. சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக சக அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கை ஆவணங்களை பார்வையிட்டு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**